# இயற்கைப் பண்ணையம் - பூச்சி விரட்டி

பயிர்சாகுபடியில் தற்பொழுது பூச்சி மற்றும் பூஞ்சனக்கொல்லிகள் அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவதினால் மனிதகுலம் தேவையற்ற உடல்நல பிரச்சினைகளால் பாதிக்கப்படுகிறது. சிலசமயம் உயிரிழப்பும் ஏற்படுகிறது. இது மட்டுமின்றி இயற்கை எதிரிப்பூச்சிகளும் கூண்டோடு அழிந்துவிடுகிறது. இவ்விழப்பை தவிர்த்து உற்பத்தி செலவைக்குறைக்க இயற்கை மூலிகை பூச்சிவிரட்டிகளை பயன்படுத்தலாம்.

இலைகள் மற்றும் விதைகளிலிருந்து உருவாக்கப்பட்ட நொதித்த கரைசலின் விரும்பத்தகாத வாசனை, சிறந்த பூச்சி தடுப்பானாக செயல்படுகிறது. இந்த கரைசலை தெளிப்பதன் மூலம் பூச்சிகள், தாவரங்களை உண்ணுவதை தடுக்கலாம். பொதுவாக, புழுக்கள் உண்ணக்கூடிய தாவரங்களின் அடையாளத்தை வாசனை மூலம் உணர்ந்து கொள்கிறது. புழு மற்றும் பூச்சிகளின் வாசனை உணர்வினை இந்த தாவர கரைசல் இடையூறு செய்வதால், பூச்சிகள் பயிர்களை உண்ணுவதை தவிர்த்துவிடும். மேலும் தெளிக்கப்பட்ட இலைகளை சாப்பிடும் பொழுது, வயிற்று பிரச்சினைகளினால் பூச்சிகள் இறந்துவிடும். இதனால் கணிசமாக முட்டையிடும் பூச்சிகளின் எண்ணிக்கை குறைகின்றது.

**தேவையான பொருட்கள்:**

- கால்நடைகள் உண்ணாத கொடிய இலைகள் (ஆடுதொடா, நொச்சி) - 1 கிலோ
- உடைந்த தண்டிலிருந்து பால் சுரத்தல் (எருக்கு, ஊமத்தங்காய்) - 1 கிலோ
- கசப்பு சுவையுடைய இலைகள் (வேம்பு, கற்றாழை) - 1 கிலோ.
- உப்பு தன்மையுடைய இலைகள் (காட்டாமணக்கு) - 1 கிலோ
- கசப்பு சுவையுடைய விதைகள் (வேம்பு, சீதாப்பழ, எட்டி விதைகள்)- 1 கிலோ
- மஞ்சள் - 100 கிராம்
- பசுமாட்டுகோமியம் - 10 லிட்டர்
- மண்பானை - 15 லிட்டர் கொள்ளவு

**செய்முறை:** மண்பானையினை வாய்பக்கம் மட்டும் தெரியும்படி மண்ணில் புதைத்துவிடவேண்டும். மேற்கண்ட இலைவகைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும். பானையில் மஞ்சள், இலைத்துண்டுகளுடன் 10 லிட்டர் கோமியத்தை சேர்க்கவேண்டும். வாய்பகுதியினை துணியைக்கொண்டு மூடிவிடவேண்டும். இதனை 7-15 நாட்களுக்கு நொதிக்கவிட வேண்டும். இலைகள் நொதித்த உடன் கரைசல் பயன்படுத்த தயாராகிவிடும்.

**பயன்படுத்தும் முறை:** இந்த பூச்சி விரட்டியினை 500 மிலி முதல் 1 லிட்டர் வரை பயிர்களின் வளர்ச்சிக்கு ஏற்ப 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

**பயன்கள்:**

- இயற்கை எதிரிப்பூச்சிகள் பாதுகாக்கப்படுகின்றது
- உற்பத்தி செலவு குறைகின்றது
- தீமை செய்யும் பூச்சிகளை கட்டுப்படுத்தப்படுகின்றது
- சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகின்றது
- பயிர்வளர்ச்சி ஊக்கியாக செயல்பட்டு, மகசூலை அதிகரிக்கிறது

மேலும் விபரங்களுக்கு

**ICAR - வேளாண்மை அறிவியல் மையம்,**

எலுமிச்சங்கிரி, மல்லிநாயனப்பள்ளி, கிருஷ்ணகிரி - 635 120.

04343 291944|80892 80123| kvk.Krishnagiri@icar.gov.in | http://www.krishnagirikvk.org/